ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1800/34 - 2013 මාර්තු මස 08 වැනි සිකුරාදා - 2013.03.08

*1800/34 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*6 ஆம் பிரிவின் கீழான சான்றிதழ்*

*1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவங்ஸ ஆகிய நான், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி, சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி ஏதேனும் வீடமைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் இத்துடன் பொறுப்பேற்கப்பட வேண்டும் என உறுதிப்படுத்துகிறேன்.*

*விமல் வீரவங்ஸ,*
*நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,*
*வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2013, பெப்புருவரி 28.*

**அட்டவணை**

*மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், பஞ்சிகாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ ஶசங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள 2917 ஆம் இலக்க காணி வரைபடத்தில் காணித்துண்டிலக்கம் 7 எனக் குறிப்பிட்டுள்ள, வரிமதிப்பீட்டிலக்கம் 104/10 இனைக் கொண்ட அண்ணளவாக 04.30 பேச்சர்ஸ் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | காணித்துண்டிலக்கம் 06 ; |
| கிழக்கு | : | 11 ஆம் இலக்க காணித்துண்டு (நுழைவுப்பாதை) ; |
| தெற்கு | : | 08 ஆம் இலக்க காணித்துண்டு ; |
| மேற்கு | : | 61 ஆம் இலக்க காணித்துண்டு (நடைபாதை). |

*3- 998*